

அமரர் புலமைச்சிகரம்

**வே.அன்பழகன்** ஞாபகார்த்தமாக

lvinstamil.com செய்தி இணையத்தளம் நடாத்தும்

தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும்

வழிகாட்டல் கருத்தரங்கும்- 2022 (முற்றிலும் இலவசமானது)

# ஆசிரியர் திரு.H.M.நிஸ்பான்
# அக்/ஸாஹிரா வித்தியாலயம் அக்கரைப்பற்று

சுட்டெண் : ------------------------------------------------------------------

## வினாத்தாள் II

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன.
- ஒவ்வொருவினாவிலும் மூன்றுவிடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| **பக்க இலக்கம்** | **பெற்ற புள்ளிகள்** |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| **இறுதிப்புள்ளிகள்** | |
| **இலக்கத்தில்** | |
| **எழுத்தில்** | |

| | ஒப்பம் |
|---|---|
| **முதலாவதுபரீட்சகர்**<br>புள்ளிவழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்று படுத்துகின்றேன். | <br>**V/II/T/** |
| **இரண்டாவதுபரீட்சகர்**<br>முதலாவதுபரிசீலனையின் மதிப்பீடுசரியானதெனச் சான்றுபகிர்கின்றேன். | <br>**V/II/T/** |
| **கணிதபரீட்சகர்**<br>மதிப்பீடுவழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளிசரியானதென தெரிவிக்கின்றேன் | <br>**V/II/T/EMF/** |
| **பிரதமபரீட்சகர்**<br>மேற்பார்வைசெய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | <br>**V/II/T/CH/** |

## வினாத்தாள் - II

1) **பின்வரும் பந்தியை வாசிக்க**

அவை அழகான கோழிக்குஞ்சுகள் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. தாய் கொக்... கொக்... என்று சத்தமிட்டன. குஞ்சுகளும் சத்தமிட்டன. சின்னஞ்சிறு சிறகுகளை அடித்தன. விரைவாக தாயின் பின்னால் ஓடின. ஒரு நாள் அந்தக் கோழிக்குஞ்சுகள் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. தூரத்துப்பற்றைக்குள் இருந்த கீரி அவற்றைப் பிடித்துச் சாப்பிட நினைத்தது. குஞ்சுகளைத் துரத்தியது.

**பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) கோழிக்குஞ்சுகள் எங்கே மேய்ந்துகொண்டிருந்தன?

.......................................................................................................................

(ii) பற்றைக்குள் இருந்தது எது?

.......................................................................................................................

(iii) “வனப்பான” என்பதற்கு ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

.......................................................................................................................

(iv) கோழியின் இளமைப் பெயர் யாது?

.......................................................................................................................

(v) உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல் யாது?

.......................................................................................................................

(vi) பந்தியில் இடம்பெற்றுள்ள அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.

.......................................................................................................................

2) **பின்வரும் வாக்கியத்திலுள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.**

அசோகச்சக்கறவர்த்தி தொளைநோக்குப் பார்வையுடன் வீதிகளில் மரக்கண்றுகளை நட்டார்.

.......................................................................................................................

3) **பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி எதிர்கால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.**

(i) நாம் இயற்கைப் பானமான இளனி அருந்தினோம்.

.......................................................................................................

(ii) விமானம் வானத்திலை பறந்து சென்றது

.......................................................................................................

4) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.**

(i) எங்களை / வீட்டிற்கு / அழைத்துச் / அப்பா / செல்வார் / நிலையத்திலிருந்து / பேருந்து

..........................................................................................................................................

(ii) உடற்பயிற்சி / உடல் / நாளாந்தம் / ஆரோக்கியம் / செய்து வந்தால் / பெறலாம்

..........................................................................................................................................

5) **பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

ஆகா மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்

6) **பின்வரும் தொடர் மொழிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) அறுபதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா

(மணிவிழா/பவளவிழா)

(ii) சுதந்திரமற்று வாழ்பவன்

(அகராதி/அடிமை)

7) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தின் வெற்றிடத்திற்கு பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**

(i) நான் எனது தங்கையுடன் சேர்ந்து பாட்டுப் ................(பாடினேன்/பாடினோம்)

(ii) குளத்தில் தாமரைப் பூ ................. (மலர்ந்தது/மலர்ந்தன)

(iii) எறும்புகள் வளைக்குள் உணவினைச் ......................... (சேகரித்தது/சேகரித்தன)

8) **பின்வரும் பழமொழியின் கருத்தினை எழுதுக.**

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை ..................................................................................................

9) **பின்வரும் ஒவ்வொரு கருத்தினையும் குறித்துக் காட்டும் மரபுத்தொடரை கட்டத்திற்குள் இருந்து தெரிவுசெய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

(i) வெட்கமடைதல் ..............................................................................................................

(ii) நியைச் சம்பாதித்தல் ....................................................................................................

| (அள்ளி இறைத்தல், தலைகவிழ்தல், முன்னுக்குவருதல், அள்ளிக்குவித்தல்) |
|---|

10) **பின்வரும் வாக்கியத்தை பலவின்பால், பன்மை, இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.**

குரங்கு மரத்திற்கு மரம் தாவித்திரிந்தது.

..........................................................................................................................................

11) **ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**



(i) .............................



(ii) .............................

12) **ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.**

**i. Ant ...................** **ii. aeroplane ...........................**

13) **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

i. brothers/How/do/many/have?/you

....................................................................

ii. big/forest/The/trees/has

....................................................................

14) "நங்கிலா" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

................................................................

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

ஆசிரியர் எங்கே இருக்கிறார்? ..................................................................................................................

16) பத்தாயிரங்கள் 5, பத்துக்கள் 1, ஒன்றுகள் 2, நூறுகள் - 3, ஆயிரங்கள் - 9 ஆகியவற்றைக் கொண்டு ஆக்கக்கூடிய எண்ணை இலக்கத்தில் எழுதுக. ........................................

17) பின்வரும் எண்ணைச் சேர்த்து எழுதுக.

7000+0+40+2 = ........................................

18) 24375 எனும் எண்ணில்

i. நூறினிடத்து இலக்கத்தினால் வகை குறிக்கப்படும் பெறுமானம் யாது?

.................................

ii. இலக்கம் 4 அமைந்துள்ள இடம் யாது? ..........................

19) எண்கோலத்திற்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக.

94, .........., ............, 121, 130, 139

20) கீழே தரப்படும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

6909, 6099, 6990, 9690

21) அட்டவணையைப் பூர்த்தி செய்க

| **பாடசாலை** | **பெண்கள் தொகை** | **ஆண்கள் தொகை** | **கூட்டுத்தொகை** |
|---|---|---|---|
| A | 1678 | 1354 | (i) |
| B | 1593 | 1668 | (ii) |

22) ஒரு பெட்டியில் 9 பந்துகள் வீதம் உள்ளன. அவ்வாறான 340 பெட்டிகளில் உள்ள பந்துகளின் எண்ணிக்கை யாது? ..........................................

23) ஒரு வியாபாரியிடம் இருந்த 32 தோடம்பழங்களில் நான்கில் ஒன்று (¼) விற்பனை செய்யப்பட்ட பின் எஞ்சிய தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ................................

24) அம்மா மு.ப 6.45 இற்கு சமைக்கத் தொடங்கி மு.ப 8.15 இற்கு சமைத்து முடித்தார். சமைப்பதற்கு அம்மா செலவிட்ட நேரத்தைக் காண்க.

........................ மணித்தியாலங்கள் ................... நிமிடங்கள்


25) 35 நாட்கள் எத்தனை வாரங்களாகும்? ............................

26) A என்னும் நகரத்திலிருந்து B எனும் நகரத்தின் வழியே நகரம் C வரையான தூரம் 12km 550m ஆகும். A யிலிருந்து B வரையான தூரம் 7km 750m ஆய்வின் B யிலிருந்து C வரையான தூரம் யாது? ................km............m

27) ஒரு பாத்திரத்தில் $5l\ 750ml$ நீர் உள்ளது. அப்பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்காக மேலும் $4l\ 850ml$ நீர் இடவேண்டியுள்ளது.
அப்பாத்திரம் கொள்ளும் நீரின் மொத்த அளவு யாது? $\ldots\ldots\ldots.l\ldots\ldots.ml$

28) ஒரு கிலோகிராம் சீனி ரூபா 240 எனவும் 500கிராம் தேயிலை ரூபா 320 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. 1kg 500g சீனியும் 250g தேயிலையும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? ரூபாய் ........................

29) சிற்றுண்டிச்சாலையில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்கள் பற்றிய தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.




i. விற்பனை செய்யப்பட்ட எள்ளுருண்டைகளின் எண்ணிக் கை யாது? ..........................

ii. தேன்குழலை விட கேசரி எத்தனை குறைவாக விற்கப்பட்டுள்ளன? ..........................

30) சூரிய நமஸ்காரப் பயிற்சியின் மூன்றாம் கட்டத்தைக் காட்டும் உரு எது?

1)  2)  3) 

31) வானில் மிக உயரத்தில் பறக்கின்ற கூர்மையான பார்வைத்திறனுடைய பறவை

1) ஆந்தை 2) கொக்கு 3) பருந்து

32) மருத்துவச் சான்றிதழ் இல்லாத பொருளைத் தெரிவு செய்க

1) பற்பசை 2) பற்தூரிகை 3) குடிநீர் போத்தல்

33) கடதாசிகளை கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்

1) கொலாஜ்  2) ஒரிகாமி  3) அச்சுப்பதித்தல்

34) பின்வருவனவற்றுள் பூச்சிகளை மட்டும் கொண்ட விடை

1) சிலந்தி, தேனீ 2) கரப்பான், தேனீ  3 தேள், வண்ணத்துப்பூச்சி

35) வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்திப் பயிரைப் பயிரிடுவதன் முக்கிய நோக்கம்

1) வீட்டுத் தோட்டத்திற்கு அழகைச் சேர்ப்பதற்கு

2) பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு

3) வீட்டுத்தோட்டத்தின் இட அளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு

36) சூரிய ஒளிமூலம் கிடைக்கும் வெப்பத்தினால் நீர் ஆவியாகுதல் பயன்படும் சந்தர்ப்பம்

1) பழங்களிலிருந்து ஜாமைத் தயாரித்தல்

2) மீனிலிருந்து கருவாட்டைத் தயாரித்தல்

3) பசும் பாலிலிருந்து வெண்ணெய் தயாரித்தல்

37) உலர் மின்கலங்களுடன் இணைக்கும் கம்பிகளினால் மின்குமிழ்கள் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் மின்குமிழ் ஒளிர்வதில்லை

1)


2)


3)


38) தானியப் பயிர்வகைக்குரிய பருப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய உணவு

1) கௌபி  2) வல்லாரை  3) பூசணிக்காய்

39) எம்மால் 1990 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை எடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவை

1) இலவச நோயாளர் வண்டிச்சேவை
2) இலவச போக்குவரத்துச் சேவை
3) இலவச ஆலோசனை சேவை

40) உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகளைக் கொண்ட சரியான கூட்டம்

1) சோறு, இடியப்பம், பிட்டு
2) நிலக்கடலை, இறைச்சி, மாஜரின்
3) பால், முட்டை, அவரை

41) அனல் மின் உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்துவது

1) நீர்  2) சூரிய ஒளி  3) நிலக்கரி

42) காசியப்பனால் தனது பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட சிகிரியா அமைந்துள்ள மாகாணம்

1) வடமத்திய  2) மத்திய  3) வடமேல்

43) ஏலேலோ ஐலசா .... எலேலோ ஐலசா ............
கட்டுமரத்தோணியிலே... ஏலேலோ ஐலசா என்று தொடங்கும் பாடல்

1) உழவர் பாடல்
2) மீனவர் பாடல்
3) அரிவி வெட்டுப்பாடல்

44) இலங்கையின் தேசியக்கொடி தொடர்பான கூற்றுக்களில் தவறான கூற்றாக அமைவது
 1) சிவப்பு நிறப்பின்னணியில் உள்ள மஞ்சள் நிற வாளேந்திய சிங்கம் உருவம் சிங்கள மக்களைக் குறிக்கின்றது
 2) செம்மஞ்சள் நிறப் பட்டியானது தமிழ் மக்களைக் குறிக்கின்றது
 3) மஞ்சள் நிறப்பட்டியானது ஏனைய இனமக்களைக் குறிக்கின்றது

45) எமது முன்னோர் மழைநீரைச் சேகரிக்கக் குளங்களை கட்டியமைக்கான பிரதான காரணம்
 1) விவசாய நடவடிக்கைகளுக்காக
 2) குடிநீர்த் தேவைக்காக
 3) பிராணிகளுக்குத் தேவையான நீரை வழங்க

46) பூ ஒன்றில் காயாக மாறும் பகுதி
 1) அல்லி 2) குறி 3) சூலகம்

47) உயர்குருதி அமுக்கம், இருதயநோய், பருத்த உடல் ஆகிய நோய்கள் ஏற்பட ஏதுவாகத்தக்க காரணங்கள் இடம்பெறும் விடை
 1) இனிப்பான உணவுகள் மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்ணுதல்
 2) உடன் உணவுகள் மிளகாய் அதிகம் அடங்கிய உணவுகள் உட்கொள்ளல்
 3) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகளவில் உட்கொள்ளல்

48) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி அல்லாதது
 1) கபரக்கொய்யன் 2) நத்தை 3) ஆமை

49) மலேரியா, யானைக்கால் போன்ற நோய்களை ஏற்படுத்துவது
 1)  2)  3) 

50) மின்காந்தம் ஒன்றின் வலிமையை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடு அல்லாது 1) 1) உலர் மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
 2)) இரும்பாணியின் நீளத்தை அதிகரித்தல்
 3) செப்புச் சுருளின் எண்ணிக்கையை அதிகரித்தல்


51) பின்வருவனவற்றுள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பாவனைப் பொருள்
 1) பிரம்பினால் செய்த இடியப்பத் தட்டு
 2) பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட இடியப்பத்தட்டு
 3) சிறு மூங்கினால் செய்த இடியப்பத்தட்டு

52) சமூகவிரோத செயற்பாடு அல்லாதது
 1) போதைப்பொருள் விற்பனை செய்தல்
 2) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
 3) வீட்டு வேலைகளில் ஈடுபடுதல்

53) கருங்குரங்கு, சுண்டெலி, மரநாய் இவை
 1. இலங்கை நாட்டு தாவர உண்ணிகள்
 2. இலங்கை நாட்டு ஊர்வன
 3. இலங்கை நாட்டு முலையூட்டிகள்

54) பயிர்களுக்கு இடையே உள்ள சிறு புற்களை பிடுங்கி எடுப்பதற்கு பயன்படுத்தும் கருவி
 1) அலவாங்கு 2) கைமுள்ளுக்கரண்டி 3) கத்தரிக்கோல்

55) வண்ணத்துப் பூச்சியின் இலையுண்ணும் பருவம்
 1)குடம்பி 2) கூட்டுப்புழு 3) முதிர்பூச்சி

56) பண்டைய காலப் படைப்பாகிய பலாப்பெத்தி அலங்காரத்தைக் காட்டுவது
 1)  2)  3) 

57) மத்திய மகாணத்தில் வசிக்கும் மக்கள் முகங்கொடுக்கக்கூடிய இயற்கை அனர்த்தம்
 1) மண் சரிவு 2) சுனாமி 3) வரட்சி

58) பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் பொருட்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் சாய்தளம் பயன்படுத்தப்படும்?
 1) மாடிக்கட்டடங்களுக்கு பொருட்களை கொண்டு செல்வதற்கு
 2) கனரக வாகனங்களில் பொருட்களை ஏற்றவும் இறக்கவும்
 3) பாரமான பொருட்களை மேலே உயர்த்துவதற்கு

59) பின்வரும் விளையாட்டுக்களில் உடற்சக்தி அதிக அளவில் விரயமாகும் விளையாட்டு அல்லாதது 1) கயிறு இழுத்தல்
 2) பாரம் தூக்குதல் 3) கரம் அடித்தல்.

60) "எனது பாடசாலையில் கொண்டாடப்பட்ட சித்திரைப்புத்தாண்டு விழா" எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1.................................................................................................................................................

.................................................................................................................................................

2.................................................................................................................................................

.................................................................................................................................................

3.................................................................................................................................................

.................................................................................................................................................

